இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 02.11.2026

குடியரசுத் தலைவருக்கு கோரிக்கை!

இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிகமிக முக்கியமான கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்பி இருக்கிறார். அதனை நாடாளுமன்ற மக்களவைக் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மாநிலங்களவைக் கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா ஆகியோர் நேரில் வழங்கி இருக்கிறார்கள்.

★ **தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரைப் பதவி நீக்கம் செய்ய நாடாளுமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

★ **தமிழ்நாட்டில் SIR நடவடிக்கையின் போது 97,37,832 வாக்காளர்கள் பெயர்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறாமல் போனது சட்டப்பூர்வமானதா என்பது குறித்து அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 143 இன் படி உச்சநீதிமன்றத்தின் கருத்தைப் பெற வேண்டும்.**

★ **நாடு முழுவதும் SIR நடவடிக்கையை ரத்து செய்ய வேண்டும்.**

★ **வாக்குச்சீட்டு முறையை மீண்டும் கொண்டு வர வேண்டும்.**

- ஆகிய முக்கியமான கோரிக்கைகளை தி.மு.க. தலைவர் அவர்கள் முன் வைத்துள்ளார்கள். இவை தமிழ்நாட்டுக்கு மட்டுமான கோரிக்கை அல்ல. இந்தியா முழுமைக்குமான கோரிக்கை ஆகும்.

இதனை தி.மு.க. இன்று புதிதாகச் சொல்லவில்லை. SIR நடவடிக்கைகள் தொடங்கிய காலத்தில் இருந்து சொல்லி வருகிறது. தமிழ்நாட்டில் அல்ல, பீகாரில் SIR நடவடிக்கை தொடங்கி, அதில் குழப்பமும் மோசடியும் நடைபெற்ற போதே தி.மு.க. அதனைக் கடுமையாக எதிர்த்தது. அதில் நடைபெற்ற மோசடிகளை அம்பலப்படுத்தியது.

பீகாரில் சுமார் 8 கோடி வாக்காளர்கள் இருந்தார்கள். SIR என்ற பெயரில் பீகார் வாக்காளர் பட்டியலிலிருந்து முதலில் 65 லட்சம் பேரைத் தேர்தல் ஆணையம் நீக்கியது. அடுத்து 3.7 லட்சம் பேரை நீக்கினார்கள். இஸ்லாமியர்கள், பட்டியல் சமூகத்தினர், பெண்கள் என்று குறிவைத்து இந்த நீக்கம் நடந்தன. பின்னர் புதிதாக 21 இலட்சம் பேரை வாக்காளர் பட்டியலில் இணைத்தது தேர்தல் ஆணையம். நீக்கப்பட்ட 3.7 லட்சம் பேரின் விவரங்களைச் சமர்ப்பிக்குமாறும், புதிதாகச் சேர்க்கப்பட்ட 21 இலட்சம் பேரும் முன்பு நீக்கப்பட்ட வாக்காளர்களா? அல்லது புதிய வாக்காளர்களா? என்ற விவரங்களை அளிக்குமாறும் தேர்தல் ஆணையத்திடம் உச்ச நீதிமன்றம் கேட்டது. அதற்கு தேர்தல் ஆணையத்தால் பதில் சொல்ல முடியவில்லை.

பீகாரில் ஒரே தொகுதியில் 80,000 இஸ்லாமியர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்க முயற்சி நடந்ததாக மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் அவர்கள் குற்றம்சாட்டினார். பா.ஜ.க. கூட்டணியில் இருக்கும் ஒன்றிய அமைச்சர் சிராக் பாஸ்வானின் சொந்தத் தொகுதியிலேயே 80 சதவிகித பட்டியல் சமூகத்தினரிடம் தேர்தல் ஆணையம் கேட்கும் ஆவணங்கள் இல்லை. பா.ஜ.க.வுக்கு எதிராக வாக்களிக்கும் இஸ்லாமியர்கள். பட்டியல் வகுப்பினர் உள்ளிட்டவர்களின் வாக்குகளைப் பறிப்பதே SIRன் நோக்கம் என்பது அப்பட்டமாக வெளிச்சத்துக்கு வந்தது.

இதனை யாராலும் தடுக்க முடியவில்லை. எனவேதான் இதே பாணியை எல்லா மாநிலத்திலும் அமல்படுத்தியது தேர்தல் ஆணையம்.

"தேர்தல் ஆணையம் ஒரு அரசியல் அமைப்பாக இருப்பதால் சட்டப்படி செயல்பட்டிருப்பதாக முன்கூட்டியே நம்புகிறோம். அதே நேரத்தில், எந்தவிதமான சட்டவிரோதமும், பாகுபாடும் நடந்திருந்தால் அந்த நடவடிக்கையே செல்லாது என அறிவிக்கப்படும்" என்று உச்சநீதிமன்றம் எச்சரித்திருந்தது. அதையும் மீறித்தான் இதுபோன்ற நடவடிக்கைகள் அனைத்து மாநிலங்களிலும் செய்யப்பட்டன.

உச்சநீதிமன்றம் எந்தத் தடையும் போடவில்லை என்று ஆன பிறகு தேர்தல் ஆணையம் துணிச்சலாக செயல்பட்டது. தேர்தல் ஆணையம் என்று சொல்வதை விட தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தான் நினைத்தது அனைத்தையும் செய்தார். மற்ற இரண்டு ஆணையர்களது ஆலோசனைகளை அவர் மதிக்கவில்லை என்பதை அந்த இரண்டு ஆணையர்களுமே வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ளார்கள்.

இப்போது உச்சநீதிமன்றமும் தனது வருத்தத்தை பதிவு செய்துள்ளது. **"படிவம் 6க்கு நாங்கள் ஒப்புதல் வழங்கவில்லை"** என்கிறார்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள். இவை அனைத்தும் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரின் நேர்மையின்மையைக் காட்டுகிறது. இதனடிப்படையில் SIR நடவடிக்கைக்குப் பின் நடந்த அனைத்து தேர்தலும் மோசடித்தனமான முடிவுகள் கொண்டதாக அமைந்துள்ளன.

"SIRக்குப் பிந்தைய வரைவுப் பட்டியலில் முந்தைய பட்டியலைவிட 97,37,832 வாக்காளர்கள் குறைவாக இருந்தனர். திருத்த மேல்முறையீட்டு நடைமுறைகளுக்குப் பிறகும் இறுதிப் பட்டியலில் 74,07,207 பேர் குறைவாக இருந்தனர். 234 தொகுதிகளிலும் சராசரியாகத் தொகுதிக்கு சுமார் 31,655 பேர் நீக்கப்பட்டு விட்டார்கள். பல தேர்தல்களில் வாக்களித்த நீண்டகாலக் குடியிருப்பாளர்கள் 'முகவரியில் இல்லை' அல்லது 'இடம்பெயர்ந்தவர்' எனக் குறிக்கப்பட்டு, தனிப்பட்ட அறிவிப்பும் விசாரணை வாய்ப்பும் வழங்கப்படாமல் பெயர்கள் நீக்கப்பட்டதாகக் கழக வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கண்டறிந்துள்ளார்கள்" என்று தி.மு.க. தலைவர் தனது மனுவில் குற்றம் சாட்டி உள்ளார்.

இவை அனைத்தையும் வைத்துப் பார்க்கும் போது இந்தியாவில் ஜனநாயகத் தேர்தல் முறை கேலிக்கூத்தாகி விட்டது என்பதும், ஒட்டு மொத்தமாக அதன் நோக்கம் சிதைக்கப்பட்டுவிட்டது என்பதும், ஜன நாயகமே படுகொலை செய்யப்பட்டுள்ளது என்பதும் அம்பலமாகி இருக்கிறது.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக இந்தியாவை இனியும் பெருமை பேசிக் கொள்வதில் எந்த நியாயமும் இல்லை.

●●

தமிழ் நிலம் காத்த

தியாகிகளுக்குத் தலைவணங்கி நன்றி செலுத்துவோம்!

எல்லைப்போராட்டத் தியாகிகள் தினத்தையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, நவ. 2-

"தமிழ் நிலம் காத்த தியாகிகளுக்குத் தலைவணங்கி நன்றி செலுத்துவோம்" என்று எல்லைப்போராட்டத் தியாகிகள் தினத்தையொட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.

நேற்று (01.11.2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

"இன்று நாம் காணும் தமிழ்நாட்டின் நிலப்பரப்பை நமக்குப் பெற்றுத் தந்த எல்லைப் போராட்டத் தியாகிகள் நினைவு நாளில் அவர்களுக்கு என் வீரவணக்கத்தைச் செலுத்துகிறேன்.

"மாலவன் குன்றம் (திருப்பதி) போனால் என்ன, வேலவன் குன்றமாவது (திருத்தணி) எங்களுக்கு வேண்டும்" என முழக்கமிட்டுப் போராடியதால்தான்



திருத்தணி, ஓசூர், கன்னியாகுமரி, செங்கோட்டை முதலிய பல ஊர்கள் இன்று நம்மிடம் உள்ளன.

சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம், மார்ஷல் நேசமணி, மங்கலங்கிழார், தாணுலிங்க நாடார், பொன்னப்ப நாடார், அப்துல் ரசாக் என எத்தனையோ தீரர்கள் முன்னின்று நடத்திய இப்போராட்டங்களில் தங்கள் இன்னுயிரையும் இழந்தவர்கள் பலர்.

எல்லைப் போராட்டத்தில் பங்கெடுத்துச் சிறையேகி, இப்போது வாழ்ந்து வரும் 110 தியாகிகளுக்கு 2021ஆம் ஆண்டு நமது Dravidian Model ஆட்சியில்தான் ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழியும் நினைவுப் பரிசும் வழங்கிப் போற்றினோம்.

தமிழ்நிலம் காத்த தியாகிகளுக்குத் தலைவணங்கி நன்றி செலுத்துவோம்!"

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் இல்ல மணவிழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரை!

முதல் பக்கத் தொடர்ச்சி

எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டு தான் அண்ணன் துரைமுருகன் என்று சொன்னால், அது மிகையாகாது.

எம்.ஜி.ஆரால் கண்டெடுக்கப்பட்டவர்!

தலைவர் கலைஞரால் வளர்த்தெடுக்கப்பட்டவர்!

1965இல் இந்தி ஆதிக்கத்தின் எதிர்ப்பு போராட்டம் நடைபெற்றபோது, தளபதியாக உருவெடுத்தவர் தான் அண்ணன் துரைமுருகன் அவர்கள்.

அவருடைய ஆரம்ப அரசியல் வாழ்க்கையைப் பற்றி சொல்ல வேண்டும் என்று சொன்னால், அவரே பல நேரங்களில் சட்டமன்றத்திலும், பொதுக் கூட்டத்தில் பேசியிருக்கிறார். என்ன என்று கேட்டால், எம்.ஜி.ஆர். அவர்கள் கண்டெடுத்து, தலைவர் கலைஞர் அவர்கள் வளர்த்தெடுத்த ஒரு மாவீரன் தான் அண்ணன் துரைமுருகன் அவர்கள்.

1963இல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஒரு விழா நடைபெற்றபோது, அண்ணன் துரைமுருகன் அவர்கள் அங்கு சிறப்புரை ஆற்றியிருக்கிறார். அந்த விழாவிற்கு வந்த எம்.ஜி.ஆர். அவர்கள் துரைமுருகன் அவர்கள் பேச்சைப் பார்த்து அசந்து ஆச்சரியப்பட்டு வாழ்த்தி, அவருடைய கல்விக்கே உதவியவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

அதுமட்டுமல்ல, பின்னர் திருவண்ணாமலையின் இடைத்தேர்தல் வந்தபோது, கே.வி.குப்பம் கூட்டத்தில் எம்.ஜி.ஆர்.தான் அண்ணன் துரைமுருகன் அவர்களை கலைஞரிடத்தில் அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

எனவே, இவ்வாறு பல்வேறு நிகழ்ச்சிகளை நான் இங்கு எடுத்துச் சொல்ல முடியும். இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து எம்.ஜி.ஆர். பிரிந்து தனி கட்சி தொடங்கியபோது, அண்ணன் துரைமுருகன் அவர்களை எம்.ஜி.ஆர். அவர்கள், "நீயும் என் கட்சியில் வந்து சேர்" என்று அழைத்திருக்கிறார். ஆனால், எம்.ஜி.ஆர். இடத்தில், அண்ணன் துரைமுருகன் அவர்கள் சொன்னது என்னவென்று கேட்டால், "நீங்கள் என்னுடைய கல்விக்கு உதவியிருக்கலாம்; என்னிடத்தில் நீங்கள் அன்பைப் பொழிந்திருக்கலாம், பாராட்டியிருக்கலாம். ஆனால், கொள்கை என்று வருகிற போது எனக்கு தலைவன் கலைஞர்தான். நான் அவரோடுதான் இருப்பேன்" என்று சொல்லி, இன்று வரையில் கலைஞர் வளர்த்தெடுத்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தில்தான் இன்றைக்கும் அவர் பொதுச் செயலாளராக இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

அண்ணன் துரைமுருகனின் வாரிசாக பணியாற்றுபவர் தம்பி கதிர் ஆனந்த்!

அவர் வழியில் வாரிசாக நாடாளுமன்ற உறுப்பினராக பொறுப்பேற்று இருக்கும், மாவட்டச் செயலாளராக பொறுப்பேற்று பணியாற்றிக் கொண்டிருக்கும் கதிர் ஆனந்த் அவர்களும் இன்றைக்கு தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

எனவே, அப்படிப்பட்ட குடும்பத்தில் நடைபெறும் இந்தத் திருமண விழாவில் உங்களோடு கலந்து கொண்டு நானும் கலந்துகொண்டு வாழ்த்துவதில் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன், பூரிப்படைகிறேன். அந்தப் பூரிப்போடு மகிழ்ச்சியோடு, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லி இருக்கும், "வீட்டுக்கு விளக்காய் நாட்டிற்கு தொண்டர்களாய்" மணமக்கள் வாழ்க, வாழ்க என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

தலைவர்களுக்கு செலுத்தும் மரியாதையிலும் பாரபட்சமா?

தீரன் சின்னமலைக்கு முதல்வர் விஜய் மரியாதை செலுத்தாதது ஏன்?

கொ.ம.தே.க. பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் கேள்வி!

நாமக்கல், நவ. 2-

சென்னையில் முத்துராமலிங்கத் தேவர் சிலைக்கு முதலமைச்சர் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய நிலையில், சுதந்திரப் போராட்ட மாவீரன் தீரன் சின்னமலை நினைவு நாளில் அவரது சிலைக்கு மாலை அணிவிக்காதது ஏமாற்றம் அளிப்பதாக கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினருமான ஈ.ஆர்.ஈஸ்வரன் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த காலங்களில் தமிழ் நாடு முதல்வர்கள் பாரபட்சமின்றி சென்னை கிண்டியில் உள்ள தீரன் சின்ன மலை சிலைக்கு ஆண்டு தோறும் நினைவு நாளில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் தற்போதைய முதலமைச்சர் ஜோசப் விஜய், சில தலைவர்களின் சிலைகளுக்கு மட்டும் மரியாதை செலுத்துவது வருத்தமளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

முத்துராமலிங்கத் தேவர் சிலைக்கு மாலை அணிவித்தது பெருமைக்குரியதுதான் என்றாலும், தீரன் சின்ன மலை நினைவு நாளான ஆடி 18 அன்று அவரது சிலைக்கு மரியாதை செலுத்தாதது ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறியுள்ளார்.

நாட்டுக்காகவும், சமூக முன்னேற்றத்திற்காகவும் தியாகம் செய்து உயிர்நீத்த தலைவர்களின் சேவைகளைப் பிரித்துப் பார்க்கக் கூடாது என்றும், அனைத்து தலைவர்களையும் சமமாக மதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். இனி வரும் காலங்களிலாவது எவ்விதப் பாகுபாடுமின்றி அனைத்து தலைவர்களின் சிலைகளுக்கும் முதலமைச்சர் ஒரே மாதிரியான அணுகுமுறையுடன் மரியாதை செலுத்த வேண்டும் என ஈ.ஆர். ஈஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மரு.ராணி ஸ்ரீகுமார் எம்.பி. தலைமை! தென்காசி மாவட்ட தி.மு.க.மகளிர் அணி சார்பில்

த.வெ.க. அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

சாஷா, திவ்யா மணிகண்டன் கண்டன உரை! வே.ஜெயபாலன், மரு.கலை கதிரவன், தி.மு.இராசேந்திரன் பங்கேற்பு!

தென்காசி, நவ. 2-

சட்டம் ஒழுங்கு சீர்கேடு பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வை கண்டித்து ஒருங்கிணைந்த தென்காசி மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு த.வெ.க. அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் கண்டன முழக்கம் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணிஸ்ரீ குமார் தலைமையில் நடைபெற்றது. கழக பேச்சாளர் சாஷா, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திவ்யா மணிகண்டன் ஆகியோர் பங்கேற்று த.வெ.க. அரசை கண்டித்து கண்டன உரையாற்றினர்.

முன்னதாக நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், முன்னாள் அமைச்சர் ச.தங்கவேலு, சட்ட மன்ற உறுப்பினர்கள் மரு. கலை கதிரவன் (தென்காசி) தி.மு.இராசேந்திரன் (கடையநல்லூர்) ஆகியோர் பங்கேற்று கண்டன ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தனர். மாவட்ட மகளிர் அணி தலைவர் அன்புமணி கணேசன் வரவேற்புரையாற்றினார்.

நிகழ்வில் முன்னாள் மாவட்டப் பொறுப்பாளர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.செல்லத்துரை, வடக்கு மாவட்ட அவைத் தலைவர் கோ.சுப்பையா, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சிவசங்கரி, துணை தலைவர் அண்ணாமலை, பொதுக் குழு உறுப்பினர் பராசக்தி, பேபி, சோபனா, மஹ்முதா, சுசீலா, கற்பக செல்வி, காந்திமதி, முத்துமாரி, கார்த்திகா, தனலட்சுமி, மாரியம்மாள், மாரிச்செல்வி, பாண்டியராணி, ரம்யா, சமுத்திரகனி, மாலதி, கலாநிதி, தேவி, சாந்தி, கல்பனா, நஜிமா, ராஜேஸ்வரி, ஜெயலட்சுமி, தலை மைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்துப்பாண்டி, சேக்தாவூது, ஆறுமுகச்சாமி, ஜேசுராஜன், மாவட்ட பொருளாளர் ஷெரீப், மாவட்ட துணைச் செயலாளர் கென்னடி, பொதுக்குழு உறுப்பினர்கள் சாமித்துரை, ரஹீம், தமிழ்செல்வி, ஒன்றிய செயலாளர்கள் ஜெ.கே.ரமேஷ், அழகுசுந்தரம், வல்லம் திவான்ஒலி, சீனித்துரை, மகேஷ் மாயவன், சுரேஷ், ஜெயா, மணிகண்டன்,

சேக்முகமது, கடற்கரை, பொன்.முத்தையா பாண்டியன், லாலா சங்கரபாண்டியன், பெரியதுரை, பால்ராஜ், ராஜதுரை, அன்பரசு, கிறிஸ்டோபர், சேர்மதுரை, நகர செயலாளர்கள் சாதிர், வெங்கடேசன், அப்பாஸ், இத்தாலியன் பீரப்பா, கணேசன், பிரகாஷ், அந்தோணிசாமி, நாகூர்கனி, தொழுக மண்டல அமைப்பாளர் மைக்கேல் நெல்சன், பேரூர் செயலாளர்கள் குற்றாலம் குட்டி, முத்தையா, பண்டாரம், முத்து, ராஜராஜன், வெள்ளத்துரை, உசேன், சிதம்பரம், கோபால், மேலகரம் துணை செயலாளர் ஜீவானந்தம், தலைமைக் கழக பேச்சாளர் கடையநல்லூர் இஸ்மாயில், கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான், மாவட்ட அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜா, கோமதி நாயகம், இஞ்சி இஸ்மாயில், முத்துக்குமார், டாக்டர் மாரிமுத்து, இசக்கிப்பாண்டியன், கே.என்.எல்.சுப்பையா, முன்னாள் அரசு வழக்கறிஞர்கள் முருகன், வேலுச்சாமி, மாவட்ட அணி துணை அமைப்பாளர்கள் பாலாமணி, ராஜேந்திரன், சங்கரன் வாத்தியார், தங்கபாண்டியன், பொரோஸ்கான், சண்முகநாதன், ஊர்மேலழகியான் சுப்பிரமணியன், சூர்யாமணி என்ற ஈஸ்வரன், கஜேந்திரன், மோகன்ராஜ், ராமராஜ், அப்துல் ரஹீம், கரிசல் வேலுச்சாமி, கருப்பணன், வேல் ஐயப்பன்,

ஆயிரப்பேரி முத்துவேல், அறங்காவலர்கள் வீரபாண்டியன், சுந்தர்ராஜன், ஒன்றிய துணை செயலாளர்கள் வாசுதேவன், ஐடிஐ ஆனந்தன், நகர நிர்வாகிகள் பால்ராஜ், ராம்துரை, சன் ராஜா, சபரி சங்கர், இசக்கி ரவி, சுப்பிரமணியன், ரபி உட்பட மகளிர் அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மகளிர் அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் த.வெ.க. அரசைக் கண்டித்து கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.